Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி - விளம்பரம் சேகரிக்க முழு நேர - பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., **DHINATH DHALAM** Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

மலர் Volume : 01 ◆ இதழ் Issue : 128 ◆ செவ்வாய்க்கிழமை Tuesday ◆ 10.03.2026 ◆ பக்கங்கள் Pages:4 ◆ ₹ 6 ◆ ஈரோடு Erode

# ஒரே நாடு, ஒரே தேர்தல் என்பது நோயைவிட மோசமான மருந்து

## ஒன்றிய அரசுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கண்டனம்



சென்னை: "ஒரே நாடு ஒரே தேர்தல் என்பது நோயை குணப்படுத்த அதைவிடக் கொடுமையான மருந்தை தருவதற்கு சமம்; நமது நாடாளுமன்றஜனநாயகத்தின் அடிப்படையையே தலைகீழாக மாற்றும் தேர்தலை நடத்துவதில் இருக்கும் நிர்வாக சிக்கல்களுக்காக ஜனநாயகத்தை முடக்க நினைப்பது தவறு" என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "2019-ஆம் ஆண்டு, இந்தோனேஷியா ஜனாதிபதி, தேசிய மற்றும் பிராந்திய சட்டமன்றங்கள், மேலும் உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒரே நாளில் தேர்தலை நடத்தியது ஒரு வரலாற்றுச் சம்பவமாக அமைந்தது.

செலவுகளைக் குறைத்து நிர்வாகத்தை எளிமைப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட இந்த முயற்சி, மனித உயிர்களின் பெரும் இழப்பை ஏற்படுத்தியது. சுமார் 900 தேர்தல் பணியாளர்கள் உயிரிழந்தனர். மேலும் 5,000-க்கும் மேற்பட்டோர் கடுமையாக உடல்நலக் குறைவு அடைந்தனர்.

2025 ஜூன் மாதத்தில், இந்தோனேஷிய அரசியலமைப்பு நீதிமன்றம் 2029 முதல் தேசிய மற்றும் உள்ளாட்சி தேர்தல்கள் தனித்தனியாக - இரண்டு முதல் இரண்டரை ஆண்டுகள் இடைவெளியில் - நடத்தப்பட வேண்டும் என்று தீர்ப்பளித்தது. வாக்காளர்கள் மற்றும் நிர்வாக அமைப்புகள் மீது ஏற்பட்ட அதிகப்படியான சுமையும், ஜனநாயகப் பங்கேற்பில் ஏற்பட்ட பாதிப்பும் இதற்குக் காரணமாகக் குறிப்பிட ப்பட்டது.

இந்தியாவில் முன்வைக்கப்பட்டுள்ள ஒரே நாடு ஒரே தேர்தல் (ONOE) முன்மொழிவை ஆதரிப்பவர்கள், லோக்சபா மற்றும் மாநில சட்டமன்றத் தேர்தல்களை ஒருங்கிணைப்பதன் மூலம் செலவுகளைக் குறைக்க முடியும், பாதுகாப்புப் படையினரின் நீண்டகால பணியமர்த்தலைத் தவிர்க்கலாம், தேர்தல் நன்னடத்தை விதிகள் (Model Code of Conduct) நடைமுறை காரணமாக ஏற்படும் நிர்வாகத்தடைகளைக் குறைக்கலாம்.

மேலும், அரசியல் கட்சிகள் நிரந்தரப் பிரச்சார நிலைக்குத் தள்ளப்படுவதைத் தவிர்க்கலாம் என வாதிடுகின்றனர். எனினும், இந்தோனேஷியாவின் அனுபவம் ஒரு எச்சரிக்கை பாடமாகத் திகழ்கிறது. ஒப்பீட்டு அரசியலமைப்பு நடைமுறைகளில், கட்டாயத் தேர்தல் ஒருங்கிணைப்பிற்குப் பெரிதாக ஆதரவு இல்லை. கனடாவில், கூட்டாட்சி மற்றும் மாகாணத் தேர்தல்கள் தனித்தனியாக நடைபெறுகின்றன.

ஆஸ்திரேலியாவில் ஒருங்கிணைப்பு இயலாத ஒன்றாகும்: மாநில சட்டமன்றங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட காலம் நான்கு ஆண்டுகளாகும்; அதே நேரத்தில் கூட்டாட்சிப் பிரதிநிதிகள் சபையின் அதிகபட்ச பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் மட்டுமே. ஜெர்மனி பெரும்பாலும் தவறாக மேற்கோள் காட்டப்படுகிறது. அங்கு நிலவும் அரசியல் நிலைத்தன்மை, ஒருங்கிணைந்த தேர்தல்களால் அல்ல.

லேண்டர் (Lander) மாநிலத் தேர்தல்கள் திட்டமிட்டே வெவ்வேறு காலங்களில் நடைபெறுகின்றன. மாறாக 'Constructive Vote of No Confidence' (ஆக்கபூர்வமான நம்பிக்கையில்லாத் தீர்மானம்) என்ற முறையால் உருவாகிறது. அதன்படி, சான்சலரை பதவியிலிருந்து நீக்குவதற்கு முன், புந்தெஸ்டாக் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தென் ஆப்பிரிக்காவும் இந்தோனேஷியாவும் விகிதாசார பிரதிநிதித்துவ முறையைப் பயன்படுத்துகின்றன; இது அரசியல் அதிகாரத்தைப் பரவலாக்கி, சிறுபான்மையினரின் குரலைப் பாதுகாக்கிறது. இந்தியாவின் அதிக வாக்குகள் பெறுபவரே வெற்றி பெறும் முறைமைக்கு (first-past-the-post) இத்தகைய பாதுகாப்புகள் இல்லை; தேசிய அளவிலான ஒரு அரசியல் அலை மாநிலத் தேர்தல்களையும் முழுமையாகத் தாக்கக்கூடும். அமெரிக்கா வழங்கும் ஒப்புமையும் பலவீனமானதே. அங்கு நிர்ணயிக்கப்பட்ட தேர்தல் சுழற்சிகள் செயல்படுவதற்குக் காரணம், ஜனாதிபதி முறைமையில் நிர்வாகத்தின் பதவிக்காலம் சட்டமன்ற நம்பிக்கையிலிருந்து தனித்துவமாகப் பாதுகாக்கப்பட்டிருப்பதுதான். அரசியலமைப்பு திருத்த முன்மொழிவு: இந்த யோசனைக்கான மிக விரிவான வரைமுறை, முன்னாள் ஜனாதிபதி ராம் நாத் கோவிந்த் தலைமையில் (2023-24) செயல்பட்ட உயர்மட்டக் குழுவினால் முன்வைக்கப்பட்டது. இது தற்போது அரசியலமைப்பு (129வது திருத்தம்) மசோதா, 2024 என்ற சட்ட வடிவில் முன்னேறி வருகிறது. முன்மொழியப்பட்டுள்ள Article 82A படி, லோக்சபா தேர்தல் சுழற்சியுடன் அனைத்து மாநிலச் சட்டமன்றங்களின் பதவிக்காலங்களையும் ஒத்திசைக்க ஜனாதிபதிக்கு ஒரு "நியமிக்கப்பட்ட தேதி" அறிவிக்கும் அதிகாரம் வழங்கப்படுகிறது. அந்தத் தேதிக்குப் பின்னர் உருவாகும் மாநில சட்டமன்றங்களின் பதவிக்காலம், அவற்றின் ஐந்தாண்டு காலம் முடிவடையாதிருந்தாலும் குறைக்கப்படும். மேலும், இந்த மசோதா "எஞ்சிய பதவிக்காலத்திற்கான தேர்தல்" (unexpired-term elections) என்ற புதிய நடைமுறையையும் அறிமுகப்படுத்துகிறது: ஒரு சட்டமன்றம் முன்கூட்டியே கலைக்கப்பட்டால், புதியதாகத் தேர்ந்தெடுக்கப்படும் சட்டமன்றம் முழு ஐந்து ஆண்டு காலம் அல்லாமல், முந்தைய காலத்தின் மீதமுள்ள பகுதியை மட்டும் நிறைவேற்றும். கூடுதலாக, ஒரே நேரத்தில் தேர்தலை நடத்துவது சாத்தியமற்றதாக

இருந்தால், மாநிலத் தேர்தல்களை ஒத்திவைக்க இந்திய தேர்தல் ஆணையத்துக்குப் பரிந்துரை செய்யும் அதிகாரமும் வழங்கப்படுகிறது. சட்டப்பிரிவு 83,172 மற்றும் 327 (Articles 83, 172 மற்றும் 327) ஆகியவற்றிலும் திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. இவை தீவிரமான அரசியலமைப்புச் சிக்கல்களை எழுப்புகின்றன.

எஸ்.ஆர்.பொம்மை எதிர் இந்திய ஒன்றியம் (S.R. Bommai vs Union of India (1994)) வழக்கில், இந்திய உச்ச நீதிமன்றம் கூட்டாட்சித் தத்துவம் அரசியலமைப்பின் அடிப்படை அமைப்பின் ஒரு பகுதியாகும் என்று உறுதி செய்தது. மாநிலங்கள் வெறும் நிர்வாக அலகுகள் அல்ல; அவை தனித்துவமான அரசியலமைப்பு அடையாளத்தைக் கொண்டவை. அவற்றின் ஜனநாயக அரசியல் சுழற்சிகள் இயல்பாகவே மாறுபடலாம்.

# "தமிழகத்தில் எங்கும் கொலை, எப்போதும் கொலை..."

## திமுக அரசு மீது எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு



சென்னை: "உங்கள் ஆட்சியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக கொலைகள் நடக்கவில்லை. எங்கும் கொலை, எப்போதும் கொலைதான் நடக்கிறது. நீங்கள் ஆண்டது போதும்; மக்கள் மாண்டது போதும்" என்று முதல்வர் ஸ்டாலினைக் குறிப்பிட்டு அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி விமர்சனம் செய்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், "நேற்றைய தினம் பவானி சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற எழுச்சிப் பயணப் பொதுக் கூட்டத்தில், கடந்த 48 மணி நேரங்களில் நடைபெற்ற பல்வேறு சட்டம் - ஒழுங்கு சீர்கேடு குறித்தான செய்திகளைப் பட்டியலிட்டு, திமுக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு அடியோடு சீர்குலைந்து விட்டதை சுட்டிக்காட்டினேன்.

இன்றைய தினம் (தற்போதுவரை) செய்திகளில் வந்துள்ள "கொலை நிலவரத்தை" சுட்டிக்காட்ட விழைகிறேன். கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை அருகே, முதியவர் கொலை செய்யப்பட்டு, மூதாட்டி மனைவிக்கு பாலியல் வன்கொடுமை, சென்னை திரிசூலத்தில் குடிசையில் தங்கியிருந்த இருவர் படுகொலை, தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அருகே விவசாயி படுகொலை, இப்படி தொடர்ச்சியாக வரும் கொலை செய்திகள், பாலியல் குற்றச் செய்திகள் மக்களிடையே அச்ச உணர்வை அதிகரித்துள்ளது.

முதியோருக்கு வீட்டில் பாதுகாப்பு இல்லை என்பது எவ்வளவு கொடூரமான நிலை? இதற்கெல்லாம் பொறுப்பேற்க வேண்டிய பொம்மை முதல்வர், கடந்த 5 ஆண்டுகளில் ஒருமுறையாவது சட்டம் ஒழுங்கைப் பற்றி வாய் திறந்து பேசியுள்ளாரா? தென்காசி விவசாயி கொலையில், காவல்துறை ஒருதலைப் பட்சமாக செயல்பட்டது என உயிரிழந்த விவசாயியின் மகன் தெரிவித்துள்ளார்.

குற்றத்திற்கான எச்சரிக்கை இருந்தும் அதை காவல் துறை தடுக்காமல் இருந்ததை எப்படி ஸ்டாலின் நியாயப்படு த்த முடியும்?

ஸ்டாலின் அவர்களே, உங்கள் ஆட்சியில் "அங்கொன்றும் இங்கொன்றுமாக" கொலைகள் நடக்கவில்லை. "எங்கும் கொலை, எப்போதும் கொலை" தான் நடக்கிறது. நீங்கள் ஆண்டது போதும்; மக்கள் மாண்டது போதும்.

மேற்கூறிய வழக்குகளில் குற்றம் இழைத்தோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென முதல்வரின் திமுக அரசை வலியுறுத்துகிறேன். தனது ஆட்சியின் கடைசி நாட்களை எண்ணிக்கொண்டிருக்கும் திமுக அரசு, இருக்கும் கொஞ்ச நாட்களிலாவது சட்டம் ஒழுங்கைக் காக்க ஆக்கப்பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

### மாநிலங்களவைத் தேர்தல் 2026

# திருச்சி சிவா, அன்புமணி உள்ளிட்ட ஆறு பேரும் போட்டியின்றி தேர்வு



சென்னை: திமுக, அதிமுக சார்பில் மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிட்ட ஆறு பேரும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் காலியாக இருந்த ஆறு மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கான தேர்தலில் வேட்பு மனுவை திரும்பப் பெறுவதற்கான கால அவகாசம் (மார்ச் 09) பிற்பகல் 03.00 மணியுடன் நிறைவடைந்தது. சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த மாநிலங்களவைத் தேர்தல் நடத்தும் அதிகாரி சாந்தி, "தமிழகத்தில் இருந்து மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிட்ட ஆறு பேரும் போட்டியின்றி தேர்வுச் செய்யப்பட்டுள்ளனர். அதாவது அதிமுக சார்பில் தம்பிதுரை, பாமக சார்பில் மருத்துவர். அன்புமணி ராமதாஸ், காங்கிரஸ் சார்பில் கிறிஸ்டோபர் திலக், திமுக சார்பில் திருச்சி சிவா, பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், தேமுதிக சார்பில் எல்.கே.சுதீஸ் ஆகியோர் போட்டியின்றி தேர்வுச் செய்யப்பட்டுள்ளனர்" எனத் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, தம்பிதுரை, அன்புமணி ராமதாஸ், எல்.கே.சுதீஷ் ஆகியோர் தாங்கள் மாநிலங்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான சான்றிதழை தேர்தல் நடத்தும் அதிகாரியான சாந்தியிடம் இருந்து பெற்றுக் கொண்டனர்.

திமுக கூட்டணி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் முன்னிலையில் சான்றிதல்களைப் பெறவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்ததேர்தலின் வெற்றி மூலம் தேமுதிக சார்பில் முதன்முறையாக எல்.கே.சுதீஷ் நாடாளுமன்றத்திற்கு செல்லவுள்ளார். அதேபோல், திருச்சி சிவா, தம்பிதுரை ஆகியோர் அதிகமுறை மாநிலங்களவைக்கு சென்றவர்கள் என்ற பெருமையைப் பெற்றுள்ளனர்.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

**தினத்தளம்**

DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

தினத்தளம் தினசரி காலை நாளிதழ் 10.03.2026

# பெரியகுளத்தில் சமூக நல்லிணக்க இஃப்தார் நிகழ்ச்சி ஓ.பன்னீர்செல்வம் பங்கேற்பு




தேனி மாவட்டம் பெரியகுளம் வட்டார அனைத்து ஜமாஅத்தார்கள் சார்பில், எ. புதுப்பட்டி ஜாமிஆ அல் அஷ்ரத்துல் இஹ்றாமிய்யா அரபிக் கல்லூரி வளாகத்தில் மாபெரும் சமூக நல்லிணக்க இஃப்தார் நிகழ்வு நடைபெற்றது.தலைமை தென்கரை ஜாமிஆ மஸ்ஜித் முன்னாள் தலைவரும், JAM கல்லூரி தலைவருமான அல்ஹாஜ் M.அபுதாஹிர் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தார்.

சிறப்பு விருந்தினர்கள்: ஓ.பன்னீர்செல்வம் B.A., சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்றார். நிகழ்வில் தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்செல்வன் விடுதலை சிறுத்தை கட்சி மாவட்ட செயலாளர் தமிழ் சுசிபாண்டி யன், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் K.S.சரவணக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும் L.M.பாண்டி யன், L.முக்கையா, முன்னாள் MLA மாவட்ட செயலாளர் முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

புனித ரமலான் மாதத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட இந்த இஃப்தார் நோன்பு திறப்பு நிகழ்வில், ஜமாத் நிர்வாகிகள், உலமாக்கள், கூட்டணி கட்சிப் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாகப் பங்கேற்றனர். சாதி, மத பேதமின்றி அனைவரும் ஒன்றிணைந்து நோன்பு திறந்த இக்காட்சி அப்பகுதியில் சமூக நல்லிணக்கத்தை பறைசாற்றும்விதமாகஅமைந்தது.

பெரியகுளம் வட்டார அனைத்து ஜமாத்தார்கள் மற்றும் கல்லூரி நிர்வாகத்தினர் இதற்கான விரிவான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

# பெரியகுளம் அருகே மேல்மங்கலத்தில் ஸ்ரீசெண்பக மூர்த்தி ஸ்ரீ பேச்சியம்மாள் திருக்கோவிலில் மகாகும்பாபிஷேகம்



தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே மேல்மங்களம் ஸ்ரீ செண்பகமூர்த்தி ஸ்ரீ பேச்சியம்மாள் திருக்கோவிலில் புணராவர்த்தன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இந்த கும்பாபிஷேசத்தில் விக்னேஷ்வர பூஜை, வாஸ்துசாந்தி, கலா கரிசனம், புன்னியாக வாகன யாகசாலை பிரவேசம், துவார சகதி பூஜை, மஹாகணபதி ஹோமம், மஹா பூர்ணாகுதி தீபாராதனை, மஹாலட்சுமி பூஜை, , நவக்கிரக ஹோமம், எஜமான சங்கல்பம்,மற்றும் புண்ணிய ஸ்தலம்- மானகாசி, சுருளி,ராமேஸ்வரம், உள்ளிட்ட கோயிலில் இருந்து தீர்த்தங்கள் கொண்டு வந்து கவச குப்பம் கும்பகோணத்தில் தெழிக்கப்பட்டன பிள்ள பூஜைகள் நடைபெற்றது. இந்த கும்பாபிஷேக விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக பாண்டி முனீஸ்வரர் வருகை புரிந்தார். பின்பு இந்த கும்பாபிஷேக விழாவில் உள்ளூர் மாவட்டத்திலிருந்தும் வெளியூர் மாவட்டத்தில் இருந்துவருகைதந்தபக்தர்களுக்கும். பொதுமக்களுக்கும் அன்னதானம் காலை முதல் மாலைவரை நடைபெற்றது. இந்த கும்பாபிஷேக விழாவை பி.ராமன், ஏ. சேகர், எம். கார்த்தி மற்றும் ஸ்ரீ செண்பகமூர்த்தி ஸ்ரீ பேச்சியம்மாள் திருக்கோவில் பங்காளிகள், நிர்வாகிகள். கும்பாபிஷேக விழா ஏற்பாடுகளை செய்திருந்தனர்



ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட 2வது மண்டல அலுவலக வளாகத்தில் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் 73 வது பிறந்த நாளை முன்னிட்டு 2 வது மண்டல தலைவர் காட்டு சுப்பு (எ) சுப்பிரமணியம் தலைமையில் தூய்மை பணியாளர்களுக்கு இலவச கண் மற்றும் பொது மருத்துவ பரிசோதனை முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் கண் பரிசோதனை ரத்த பரிசோதனை, பிரஷர், சர்க்கரை, தைராய்டு, சளி, காய்ச்சல் மற்றும் பொதுநலமருத்துவபரிசோதனைகள்இலவசமாகசெய்யப்பட்டது.இந்தபரிசோதனையில் 3 மருத்துவர்கள், 12 செவிலியர்கள் பணியாற்றினர். இந்த முகாமில் 200க்கும் மேற்பட்டவர்கள்தூய்மைபணியாளர்கள்இலவசபரிசோதனைபெற்றுபயன்அடைந்தனர். இந்த முகாமில் திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலரும் பங்கேற்றனர்.

# விருத்தாசலம் தொகுதியில் போட்டியிட இளம் வேட்பாளரான வேப்பூர் குணா விருப்பமனு தாக்கல்



தமிழ்நாடு 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, 152வது விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடுவதற்கான தனது விருப்பமனுவை, நல்லூர் வடக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளரான வேப்பூர் குணா அவர்கள் சென்னை அண்ணா அறிவாலயத்தில் முறைப்படி அளித்தார். மாநில துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தீவிர ஆதரவாளராக அறியப்படும் இவர், விருத்தாசலம் தொகுதியில் போட்டியிட விருப்பம் தெரிவித்து மனு அளித்துள்ள மிக இளம் வயது வேட்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது. சென்னை அண்ணா அறிவாலயத்திற்கு நேரில் வருகைதந்த அவர், கட்சித்தலைமையிடம் இந்த மனுவை வழங்கினார். இளைஞர்களுக்கு அரசியலில் அதிக வாய்ப்பளிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புகளுக்கிடையே, இளம் வயது நிர்வாகியான இவரது இந்த முன்னெடுப்பு அப்பகுதி கட்சித் தொண்டர்கள் மற்றும் இளைஞர்களிடையே கவனத்தைப் பெற்றுள்ளது.





சென்னை, சைதாப்பேட்டை தேரடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார்கள். உடன், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கப்பாண்டியன் , துணை மேயர் மு.மகேஷ்குமார் ,சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் ரஷ்மி சித்தார்த் ஜகடே.இ.ஆ.ப. சென்னை பெருநகர மாநகராட்சி மண்டல குழு தலைவர்கள் எம். கிருஷ்ணமூர்த்தி (கோடம்பாக்கம்), இரா.துரைராஜ் (அடையாறு) மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர் .



முன்னாள் அமைச்சர் என்.கே.கே. பி.ராஜா 61 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு அவரது இல்லத்திற்கு ஈரோடு மாநகர திமுக விவசாய அணி துணை அமைப்பாளர் வ.ராசு தலைமையில் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார். இந்த நிகழ்வில் தண்டபாணி,பாபு,சுரேந்திரன், செந்தில்,ஜம்பு,மணி ஆகியோர் உடன் இருந்தனர்.

# புதிய சங்கமான பண்ணைவிளை வின்னர்ஸ் லயன் சங்கம் தொடக்கம்

## சாயர்புரம், செவத்தையாபுரம் லயன்ஸ் சங்கத்தின் தலைவர் டாக்டர் S.பண்டாரம் தலைமையில் நடைபெற்றது




சாயர்புரம், செவத்தையாபுரம் லயன்ஸ் சங்கத்தின் தலைவர் டாக்டர் S.பண்டாரம் தலைமையில் நடைபெற்றது. இதில் புதிய சங்கமான பண்ணைவிளை வின்னர்ஸ் லயன் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது.

இந்த விழாவில் லயன்ஸ் ஆளுநர் டாக்டர் H. ஷாஜகான் புதிய சங்கத்தை முறைப்படி தொடங்கி வைத்தார். கூட்டத்தில் புதிய உறுப்பினர்களை 2019–20 ஆளுநரும் உலகின் நம்பர் ஒன் லயன்ஸ் ஆளுநருமான லயன் ஜே.கே.ஆர்.ஜெ. முருகன் புதிய உறுப்பினர்களைஇயக்கத்தில்இணைத்தார்.

புதிய சங்கத்தின் பட்டய தலைவராகலயன் F.உத்தகன், பட்டய செயலாளர் லயன் T. இப்ராஹிம், பட்டய பொருளாளர் லயன் V.சேகர், லயன்ஸ் முன்னாள் ஆளுநர் டாக்டர்.N.K. விஸ்வநாதன் பதவியில் அமர்த்தினார்.

இந்த நிகழ்ச்சியில் முதலாம் துணை ஆளுநர் லயன் வெற்றிச்செல்வன், இரண்டாம்துணைஆளுநர்டாக்டர்.K.P.ஜான் சுபாஷ், முத்த தலைவர்களின் வழிகாட்டி டாக்டர்.A.பன்னீர்செல்வம், நிகழ்ச்சியின் விழா குழு தலைவர் நாகராஜ், நிகழ்ச்சி தொகுப்பாளர்கள் ராஜன் மற்றும் ஜெபதங்கம் பிரேமா, செயலாளர் லயன் K.விஜயசிவா,பொருளாளர்லயன்P.பாஸ்கர், மண்டலதலைவர் ஆரோக்கிய பழம்,ராம்ஸ், T.அன்பரசன், கேபினட் செயலாளர் சுப்பையா, கேபினட் பொருளாளர் பிரேம், பி.ஆர்.ஓ.வனமூர்த்தி, ராய்ஸ்டண், T.M.சரவணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மொடக்குறிச்சியில் டாக்டர் கலைஞர் முழுதிருவுருவ வெண்கல சிலை, கலைஞர் படிப்பகம், திமுக இளைஞரணி அன்பகம் உதயம் அலுவலகம் திறப்பு விழா

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைக்கிறார்



ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சியில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகே அமைந்துள்ள டாக்டர் கலைஞர் முழுதிருவுருவ வெண்கல சிலை, கலைஞர் படிப்பகம், இளைஞர்அணி அலுவலகம், ஈரோடு மாவட்டம் மொடக்கு றிச்சி சட்டமன்ற தொகுதி அலுவலகம் ஆகியவை வீட்டு வசதிதுறை அமைச்சர் சு.முத்துசாமி வரவேற்புரையுடன்திமுகஇளைஞர்அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக திமுக இளைஞர்அணி அறக்கட்டளைக்கு சொந்தமான இடத்தில் அன்பகம் உதயம் என்ற புதிய கட்டிடத்தை திறந்து வைக்க உள்ளார். இந்நிகழ்ச்சியில் முன்னிலை திமுக கழக துணை பொது செயலாளர் அந்தியூர் ப.செல்வராஜ்.எம்.பி , செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் , உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி , மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் , ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மரு. மதிவேந்தன் , மேற்கு மண்டல திமுக பொறுப்பாளர் கரூர் மாவட்ட கழக செயலாளர் செந்தில்பாலாஜி , மாவட்ட கழக செயலாளர்கள் என்.நல்லசிவம், தோப்பு என்.வெங்கடாசலம், வி. சி.சந்திரகுமார்,எம். எல்.ஏ, , ஏ.ஜி.வெங்கடாசலம்.,எம்.எல்.ஏ , மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், திமுக இளைஞர்அணி துணை செயலாளர்கள் S.ஜோயல், இன்பாரகு, நா.இளையராஜா தாட்கோ தலைவர், ப.அப்துல்மாலிக், க. பிரபுகஜேந்திரன், P.S.சீனிவாசன், GP ராஜா, C.ஆனந்தகுமார். அன்பகம் செந்தில், ஒன்றிய கழக செயலாளர்கள் வா.கதிர்வேல், சு.குணசேகரன், R.விஜயகுமார். பா.நடராஜன், C. முத்துகுமார், V.S.சிவகுமார். P.செங்கோட்டையன், தோப்புசதாசிவம், மொடக்குறிச்சி பேரூர் செயலாளர் P.V.சரவணன்.பகுதிகழக செயலாளர்கள்வி.குமாரவடிவேல், வி.சி.நடராஜன், துணைமேயர் வி.செல்வராஜ்,பொ. ராமசந்திரன், வில்லரசம்பட்டி முருகேசன்,அக்னிசந்திரசேகரன்,என்.தண்டபாணி, கா.லட்சுமணகுமார், இளைஞர்அணிமாவட்ட அமைப்பாளர் ஜெ.திருவாசகம்,மாவட்டதுணை அமைப்பாளர்கள்கி.ரகுராம்,ச.சதீஷ்குமார். எஸ். எஸ்.விஜயராஜன், இரா. நித்தின்,மாநகரஅமைப்பாளர் கே.டி.சேந்தபுகழன், துணை அமைப்பாளர்கள்பா.ஜாகிர்உசேன், செ.ரமேஷ், எஸ்.சசிகுமார்,அ.பார்த்திபன், பெ.சீனிவாசன், வி.நவீன்குமார், அன்பு (எ) அன்பரசன் மற்றும் மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட கழக மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் பகுதி செயலாளர்கள், நிர்வாகிகள், இளைஞர்அணி மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் பகுதி, அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள்,சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் இந்தியா கூட்டணி நிர்வாகிகள் ஆகியோர் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.கூட்டம் முடிவில் இளைஞர்அணி துணைசெய லாளரும், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினருமான கே.இ.பிரகாஷ் நன்றியுரை கூறுகிறார்.

ஆகையால், கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மாநில திமுக இளைஞர்அணி துணை செயலாளரும், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினருமான கே.இ.பிரகாஷ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார்

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நேற்று (09.03.2026) மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, விதவை உதவித்தொகை, கருணை அடிப்படையில் வேலை, மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, இலவச வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல், விலையில்லா தையல் இயந்திரம், ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் என மொத்தம் 282 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்று உரிய துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், தனித்துணை ஆட்சியர் செல்வராஜ், உதவி ஆணையர் (கலால்) தியாகராஜன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மகேஸ்வரி, நலஅலுவலர்பூபதி உட்பட அனைத்துத்துறைஅலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# எஸ்.டி.பி.ஐ. கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டத்தின் சார்பில் சமூக நல்லிணக்க இப்தார் நிகழ்ச்சி








ஈரோடுதெற்குமாவட்ட எஸ்டிபிஐ கட்சியின் சார்பில் நடைபெற்ற இப்தார் நிகழ்ச்சி மாவட்ட தலைவர் அ.சாகுல் ஹமீது தலைமையில் நடைபெற்றது. மாவட்ட பொதுச்செயலாளர் க.முனாப் வரவேற்புரையாற்றினார்.

சிறப்பு அழைப்பாளர்களாக ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் எஸ் டி பி ஐ கட்சியின் தமிழ் மாநில பொருளாளர் A.முஸ்தபா கோவை மண்டல செயலாளர் ப.முகமது லுக்மானுல் ஹக்கீம், SDTU தொழிற்சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் N.ரவூப் நிஸ்தார், மாநில பொருளாளர் ஜே.எம்.ஹசன் பாபு, ஜமாத்துல் உலமா சபையின் மண்டல தலைவர் A.அப்துல் அஹத் தாவூதி , சமூக நீதிக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கன குறிஞ்சி, காங்கிரஸ் கட்சியின் மாநகர மாவட்ட தலைவர் பா.ராஜேஷ் ராஜப்பா, முன்னாள் மாவட்ட தலைவர் T.திருச்செல்வம், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர் எஸ்.எம்.சாதிக், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் மாநில இளைஞரணி செயலாளர் S.சூரியமூர்த்தி, மாவட்ட செயலாளர் கொங்கு கோவிந்தராசு, மனிதநேய மக்கள் கட்சியின் மாவட்ட தலைவர் அ.சித்திக், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்ட செயலாளர் M.முஹம்மது ஆரிப், மக்கள் நீதி மையத்தின் மாவட்ட செயலாளர் R.முரளி கிருஷ்ணன், மனிதநேய ஜனநாயக கட்சியின் மாநிலச் செயலாளர் A.பாபு ஷாஹின்ஷா, மாவட்ட செயலாளர் பா.மீரான், தமிழ் புலிகள் கட்சியின் மாவட்ட செயலாளர் இரா.சிந்தனை செல்வன், 36வது வார்டு மாமன்ற உறுப்பினர் பழனியப்பா நா.செந்தில்குமார், காங்கிரஸ் கட்சியின் மண்டல தலைவர் H.M.ஜாபர் சாதிக், சமுதாயப் பிரமுகர்கள் KKAS.ஹசன் அலி, ICO நாசர் அலி உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளின் நிர்வாகிகள், உலமா பெருமக்கள், ஜமாத் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் எஸ்டிபிஐ கட்சியின் மாவட்ட துணைதலைவர் குறிஞ்சி பாஷா, மாவட்ட செயலாளர் தளபதி K.S.பஷீர், மாவட்ட பொருளாளர் H.முகமது ஜாபிர், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் S.அப்துல் ரகுமான், மு.ஜமால்தின், A.S.முகமது மன்சூர், ஈரோடு கிழக்கு தொகுதி தலைவர் எஸ்.எம். ஜியாவுதீன, SDTU தொழிற்சங்கத்தின் மாவட்ட தலைவர் கேபிள் M.சபீர் அஹமது, மாவட்ட செயலாளர் R.சாதிக், மாவட்ட துணைத்தலைவர் காஜா மைதீன், மகளிர் அணி மாவட்ட தலைவர் M. சகிலா பானு, மாவட்ட செயலாளர் A.ரசீதா, ஐடிவிங் மாவட்ட தலைவர் நா.பைசல் அஹமது, மாவட்ட செயலாளர் S.மன்சூர், பொறியாளர் அணி மாவட்ட தலைவர் Er. S.முஹம்மது ஷஃப்வான் உள்ளிட்ட கட்சியின் நிர்வாகிகள் துணை அமைப்புகளின்பொறுப்பாளர்கள் பெண்கள் உள்ளிட்ட 500 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி கே.பழனிசாமி , 'மக்களை காப்போம்; தமிழகத்தை மீட்போம்' என்ற உன்னத நோக்கத்தை லட்சியமாக கொண்டு தமிழகம் முழுவதும் சட்டமன்ற தொகுதி வாரியாக 'புரட்சித் தமிழரின் எழுச்சிப்பயணம்' என்ற தொடர் பிரச்சார சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார். அதன்படி 74ஆம் நாளான 08.03.2026 அன்று, 193வது சட்டமன்ற தொகுதியாக, ஈரோடு புறநகர் கிழக்கு மாவட்டம், பவானி சட்டமன்றத் தொகுதி, டிஏகே பில்டிங் அருகில் புரட்சித் தமிழர் எடப்பாடி கே.பழனிசாமி பிரச்சாரம் மேற்கொண்டார்.

# வாசவி விருக்ஷம் க்ளப் கோவை சார்பாக, கோவை பந்தயசாலையில் நடைபெற்ற மாபெரும் மாரத்தான் போட்டி

## சுமார் 1200க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்




மார்ச் 8ம் தேதி உலக மகளீர் தினமாக நாடு முழுவதும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்த நாளை கொண்டும் வகையில்,

கோவை பந்தயசாலையில் மகளிர்களுக்கான சிறப்பு விழிப்புணர்வு மாரத்தான் போட்டி நடைபெற்றது. வாசவி விருக்ஷம் க்ளப் சார்பாக நடைபெற்ற இந்த மாரத்தான் போட்டியில் சுமார் 1200க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டு ஓடினர். பெண்களால் பெண்களுக்காக நடத்த படும் மிகபெரிய மாரத்தான் போட்டியாகஇந்தமாரத்தான் போட்டி நடைபெற்றது. தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய வாசவி விருக்ஷம் க்ளப்செயலாளர் லக்ஷ்மி பிரியா ஸ்ரீதரன் இது குறித்து கூறியதாவது.

கோவையில் முதல் முறையாக பெண்களுக்கான மாரத்தான் போட்டியினை பெண்களாகவே ஏற்பாடு செய்து வெற்றி கரமாக நடத்தி உள்ளதாகவும், இந்த மாரத்தான் போட்டியில் 14வயது முதல் 44வயது வரையிலான பெண்கள் கலந்து கொண்டு ஓடினர் என தெரிவித்தார். இதன் மூலமாக கிடைக்கும் நிதியை கொண்டு தேசிய கண்பார்வையற்றோர் ஆணையத்தின் கீழ் கண் பார்வைக்காக காத்திருக்கும் பல்வேறு பெண்களுக்கு, தேவையான கல்வி,மருத்துவசிகிச்சை தேவைகளுக்காக வழங்க பட உள்ளது என தெரிவித்தார். பெண்களுக்கு உதவும் நோக்கத்தில் இந்த க்ளப்பை உருவாக்கி 8 மாதங்களே கடந்த நிலையில், முதல் முறையாக இத்தனை பெரியமார்ததான்போட்டியை ஒருங்கிணைத்தது மகிழ்ச்சியை அளிப்பதாக கூறினார். மேலும் இதனை கோவை மாநகராட்சியின் மேயர் ரங்கநாயகி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கொடியசைத்து இந்த மாரத்தான் போட்டிகளை துவக்கி வைத்ததாகவும் தெரிவித்தார். மேலும் இந்த போட்டிகளில் கேஜி மருத்துவமனை தலைவர் டாக்டர் பக்தவத்சலம், டாக்டர் சுமன், எஸ்விஎம் பள்ளி தலைவர் மணிமேகலை, ஸ்ரீஷா, வில்வா ஜிவல்லரி உரிமையாளர் விஜயகுமார், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கோவை இராமநாதபுரம் பங்கஜா மில் சாலையில் வளர்பிறை மகளிர் அறக்கட்டளை சார்பாக கொண்டாடப்பட்ட மகளிர் தினவிழா

## பல்வேறு சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கி பெருமைபடுத்தப்பட்டது



கோவை இராமநாதபுரம் அடுத்த பங்கஜா மில் சாலை, கனேசபுரம் பகுதியில் கடந்த 11 ஆண்டுகளாக வளர்பிறை மகளீர் அறக்கட்டளை செயல்பட்டு வருகிறது. இந்த அறக்கட்டளையின் 11 ம் ஆண்டு துவக்கவிழாவை முன்னிட்டும், மார்ச் 8ம் தேதி உலக மகளீர் தினத்தை கொண்டாடும் வகையிலும், பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றது. குறிப்பாக குழந்தைகளுக்கானவிளையாட்டு போட்டிகள், நடன நிகழ்ச்சிகள், நடைபெற்று அதில் சிறப்பாக செயல்பட்ட குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கபட்டது. இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கோவை வடக்கு சட்டமன்ற தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அம்மன் கே அர்ஜூனன் முன்னாள் கவுன்சிலர் செல்வகுமார், இராமநாதபுரம் பகுதி செயலாளர் முருகவேல், தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் மாநில துணை தலைவர், வழக்கறிஞர் புஸ்பாணந்தம், இராமநாதபுரம் காவல் நிலைய ஆய்வாளர் மணிமேகலை என பலரும் கலந்து கொண்டு போட்டிகளை கண்டு ரசித்தனர். தொடர்ந்து மகளீர் தினத்தை முன்னிட்டு பல்வேறு துறைகளில் சாதனை படைத்த சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் வளர்பிறை அறக்கட்டளை தலைவர் ராஜ ராஜேஷ்வரி, செயலாளர் துர்கா தேவி, பொருளாளர் கேத்ரின், துணைச்செயலாளர்சீனா,துணை பொருளாளர் காயத்ரி, செயற்குழு உறுப்பினர்கள் கன்யா, வினோதினி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# தூத்துக்குடி மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் 50வது வார்டு பகுதியில் தெருமுனை பிரச்சார கூட்டம்

தூத்துக்குடி மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி 50வது வார்டு சார்பில் தெருமுனை பிரச்சார கூட்டம் வார்டு தலைவர் காமராஜ் தலைமையில் வள்ளிநாயகபுரம் 2வது தெரு சந்திப்பில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்ட தலைவர் எஸ்.எம்.சகாயராஜ் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் மண்டல தலைவர்கள் செந்தூர்பாண்டி சேகர், ஐசன்சில்வா மற்றும் முன்னாள் மாநகர பிற்படுத்தப்பட்டோர் பிரிவு தலைவர் ஜெயக்கொடி, மாநில பொதுக்குழு உறுப்பினர் சாமுவேல் ஞானதுரை, துணைத் தலைவர்கள் மார்க்கஸ், முத்துராஜன், மாவட்டச் பொதுச் செயலாளர் கோபால், மாவட்டச் செயலாளர்கள் இக்னேஷியஸ், கதிர்வேல், மாநிலபேச்சாளர்பார்த்திபன், மகிளா காங்கிரஸ் மாநில இணை ஒருங்கிணைப்பாளர் திருமதி முத்து விஜயா, துணை அமைப்பு தலைவர்கள் எஸ்.சி.பிரிவு பிரபாகரன், அமைப்புசாரா பிரிவு நிர்மல் கிறிஸ்டோபர், ஆராய்ச்சி பிரிவு ஆடிட்டர் சிவ்ராஜ் மோகன், சிறப்பு பேச்சாளர் அனிஸ்,50 வார்டு நிர்வாகிகள் முன்னாள் மாமன்ற உறுப்பினர் மாரியப்பன், இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகள் ஜோசப், ரென்னிஸ், ஜெயமணிசுரேஷ், பாஸ்கர், ராஜா செல்வராஜ், ஜேம்ஸ் லட்சுமணன் ஆறுமுகம், பழனி ராஜன், முன்னாள் வட்டார இளைஞர் காங்கிரஸ் தலைவர் லெனின் ராஜ், முன்னாள் மாவட்ட இளைஞர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராஜாராம், எஸ்.எம்.டி சுந்தர்ராஜ், ரூஸ்வெல்ட், மாரியப்பன், சேகர், சுரேஷ்குமார், முருகேசன், சேக்ஸ்பியர், ஜேசன், வழக்கறிஞர்கள் செல்வம், பிராங்கிளின், இம்மானுவேல், பார்த்திபன், ஆணிராஜ், வார்டுதலைவர்கள் முனியசாமி நம்பிராஜன், ரதன் தனிஸ்லாஸ், சரவணன் மற்றும் நிர்வாகிகள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் ஸ்டாலின் பிறந்தநாள் விழா

# பூலாம்பாடியில் பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது



கடலூர் மாவட்டம், வேப்பூர் அடுத்த பூலாம்பாடி கிராமத்தில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு, பெண்களுக்குப் புடவைகள், நலத்திட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவு வழங்கும்விழாவிமர்சையாகநடைபெற்றது.

இந்த விழாவுக்கு திமுக நல்லூர் வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர் பூலாம்பாடி அண்ணாதுரை தலைமை வகித்து நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். ஒன்றிய துணைச் செயலாளர்கள் குணா, அன்புக்குமரன் மற்றும் முரசொலி மேலாளர் கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட நிர்வாகிகள் ரகுநாதன், ராமு, தனசேகரன், பொன். அண்ணாதுரை, குருசரஸ்வதி ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

இவ்விழாவில், கடலூர் மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளரும், கழுதூர் ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்வி குழுமத்தின் தாளாளருமான சி.வெ.க.வெங்கடேசன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து, விழாவில் பங்கேற்ற பெண்களுக்குப் புடவைகள், பல்வேறு நலத்திட்ட உதவிகள் மற்றும் பொதுமக்களுக்கு அறுசுவை உணவுகளை அவர் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் திரளாகக் கலந்து கொண்டனர்.

# பவானி வித்யாஸ்ரம் பள்ளியில் உலக மகளிர் தின முப்பெரும் விழா




கடலூர் மாவட்டம், வேப்பூர் வட்டம், கோ. கொத்தனூரில் அமைந்துள்ள பவானி வித்யாஸ்ரம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் உலக மகளிர் தினம், சாதனையாளர் பாராட்டு மற்றும் பெற்றோரைப் போற்றும் நிகழ்வுகளை உள்ளடக்கிய 'முப்பெரும் விழா - 2026' வெகுசிறப்பாகநடைபெற்றது.

கல்லூரி வளாகத்தில் உள்ள கலை அரங்கில் தொடங்கிய இவ்விழாவிற்கு, கடலூர், பாண்டி மற்றும் வேப்பூர் ஸ்ரீ பவானி கல்வி நிறுவனங்களின் தாளாளர்நாராயணன் அவர்கள் தலைமை தாங்கினார். கல்வி நிறுவனங்களின் செயலாளர் மகாலட்சுமி நாராயணன் அவர்கள் முன்னிலை வகித்து சிறப்பித்தார்.

இவ்விழாவில் விருத்தாசலம் தனி வட்டாட்சியர் மஞ்சுளா மற்றும் தமிழ்நாடு காவல்துறையின் உதவி ஆய்வாளர் பொட்டா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு, பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கும், மாணவர்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக விளங்கும் பெற்றோர்களுக்கும் பாராட்டுகளைத் தெரிவித்து கௌரவித்தனர்.

இந்த முப்பெரும் விழாவிற்கான ஏற்பாடுகளைப் பள்ளியின் நிர்வாக அலுவலர்பொன்.சடையமுத்து மற்றும் தலைமை ஆசிரியை ஜெஸ்வந்தி ஆகியோர் சிறப்பாகச் செய்திருந்தனர். விழாவில் பள்ளி மாணவ-மாணவியர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலரும் திரளாகக் கலந்து கொண்டு நிகழ்ச்சியினைச் சிறப்பித்தனர்.

DHINATH DHALAM Morning Tamil Daily 10.03.2026

# ஈரோடு மாநகரில் சமூக நல்லிணக்கத்தைப் போற்றும் வகையில், எஸ்டிபிஐ (SDPI) கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டத்தின் சார்பில் எழுச்சியூட்டும் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி






ஈரோடு எம்.ஐ.எஸ் (MIS) மஹாலில் நடைபெற்ற இந்த நிகழ்வு, மதங்களைக் கடந்து மனிதநேயம் தழைக்கும் ஒரு சங்கமமாக அமைந்தது. மாலை 6 மணியளவில் நோன்பு திறக்கும் நேரத்தில், இஸ்லாமிய சகோதரர்களுடன் பல்வேறு அரசியல் மற்றும் சமூக அமைப்புகளைச் சேர்ந்த தலைவர்கள் கைகோர்த்து பங்கேற்றனர்.

இந்த நல்லிணக்க நிகழ்வில் ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் மாநகர் மாவட்ட தலைவர் பா. ராஜேஷ் ராஜப்பா, முன்னாள் மாவட்ட தலைவர் டி. திருச்செல்வம், மண்டல தலைவர்கள் எச். எம். ஜாபர் சாதிக், மாமரத்து பாளையம் எஸ். கோபி, தமிழ்நாடு தொழிலாளர் காங்கிரஸ் (TCTU) மாநிலத் துணைத் தலைவர் குளம் எம். ராஜேந்திரன்.தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் மாநில பொதுச் செயலாளர் ஆரிப் அலி,ஈரோடு மாநகர் மாவட்ட இளைஞர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் மு.மெகபூப் உசேன் மற்றும் நவீன்,பொதுச் செயலாளர் இரா.கனகராஜன், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் ஊடகப் பிரிவு தலைவர் ம.முகமது அர்சத். ஆகியோர் திரளாகக் கலந்து கொண்டு, நோன்பு கஞ்சி மற்றும் சிற்றுண்டிகளைப் பகிர்ந்துகொண்டுசகோதரத்துவத்தை வெளிப்படுத்தினர்.

ஒற்றுமையின் முழக்கம்:

நிகழ்வின் போது பேசிய தலைவர்கள், இத்தகைய இப்தார் விருந்துகள் சமூகத்தில் நிலவும் வேற்றுமைகளைக்களைந்து,மக்களிடையே அன்பையும் ஒற்றுமையையும் வலுப்படுத்தும் ஒரு பாலமாகத் திகழ்வதாகக் குறிப்பிட்டனர்.

எஸ்டிபிஐ கட்சி ஏற்பாடு செய்திருந்த இந்த உபசரிப்பு, வந்திருந்த அனைவரிடமும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

# வேப்பூர் அருகே மணிமுத்தாற்றில் ரூ.12 கோடியில் வெள்ளத்தடுப்புச்சுவர் அமைக்கும் பணி தொடக்கம்



கடலூர் மாவட்டம், வேப்பூர் அருகேயுள்ள இலங்கியனூரில், மணிமுத்தாற்றில் வெள்ளப் பாதிப்புகளைத் தடுக்கும் வகையில் ரூ.12 கோடி மதிப்பீட்டில் வெள்ளத் தடுப்புச்சுவர் அமைக்கும் பணிகள் பூமிபூஜையுடன்தொடங்கப்பட்டன.

இப்பகுதியில் மழைக்காலங்களில் மணிமுத்தாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படும்போதெல்லாம், தண்ணீர் கரைபுரண்டு ஓடி அருகிலுள்ள கிராமங்களுக்குள் புகுவது வழக்கம். இதனால், அப்பகுதியில் வசிக்கும் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவதோடு, பெருமளவிலான விவசாய நிலங்களும்சேதமடைந்து வந்தன. இதற்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், மணிமுத்தாற்றில் முறையான வெள்ளத் தடுப்புச்சுவர் அமைக்க வேண்டும் என்று இலங்கியனூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராம மக்கள் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தனர்.


மக்களின் இந்தக் கோரிக்கையை ஏற்று, ரூ.12கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தடுப்புச்சுவர் கட்டுவதற்கான முறையான அனுமதி பெறப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இத்திட்டத்தின் கட்டுமானப் பணிகளைத் தொடங்குவதற்கான பூமி பூஜை நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு விருத்தாசலம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் ராதாகிருஷ்ணன் தலைமை வகித்து, பூமி பூஜை செய்து பணிகளை முறைப்படி தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் வேப்பூர் வட்டாட்சியர் செந்தில்வேல், பொதுப்பணித்துறைபாசனப்பிரிவு உதவி செயற்பொறியாளர் பிரசன்னா, உதவிப் பொறியாளர் சுதர்சன் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர். மேலும், காங்கிரஸ் கட்சியின் மேற்கு வட்டாரத் தலைவர் பூலாம்பாடி செல்வ ஆனந்த், நிர்வாகிகள் சின்னதுரை, ஆறுமுகம், கந்தசாமி,லெனின் உள்ளிட்டோரும், சுற்றுவட்டார கிராமங்களைச்சேர்ந்தபொதுமக்களும் திரளாகப் பங்கேற்றனர்.



கன்னியாகுமரி மாவட்டம் வழியாக லாரியில் கேரளாவிற்கு கடத்த முயன்ற 10 ஆயிரம் கிலோ ரேஷன் அரிசி பறிமுதல் பறக்கும் படை தனி வட்டாட்சியர் தலைமையிலான அதிகாரிகள் நடவடிக்கை



கன்னியாகுமரி மாவட்டம் வடசேரி ஆசாரிமார், வடக்கு தெரு பகுதியில் இரு தினங்களுக்கு முன்பு மோட்டார் சைக்கிள் திருட்டு நடைபெற்றது மேலும் அப்பகுதியில் தினசரி வாகனங்களில் இருந்து பெட்ரோல் திருட்டும் நடைபெற்று வருகிறது.

இதுகுறித்து வடசேரி காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. இ' நிலையில் இரவு நேரத்தில் அப்பகுதியில் இருசக்கர வாகனத்தில் இருந்து இரண்டு வாட்டர் கேன்களில் பெட்ரோல் திருடிச் செல்லும் நபர் குறித்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரல் தொடர் இதுபோன்ற திருட்டுகளில் ஈடுபடுவது வாடிக்கையாக வைத்துள்ளதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது உடனடியாக போலீசார் சம்பந்தப்பட்ட நபரை கைது செய்ய கோரிக்கை.

# கோவையில் பெண்கள் தினத்தை முன்னிட்டு சாய் சோசியல் சர்விஸ் சார்பில் புற்றுநோய் விழிப்புணர்வு கையேடு வெளியீட்டு விழா நிகழ்ச்சி




சாய் சமூக சேவை என்ற அரசு சாரா அமைப்பு சமூகத்தில் பின்தங்கிய மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் நோக்கில் பல்வேறு சமூக நலத் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இந்த நிலையில்,

சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு கோவை,ஹோப்காலேஜ் அருகிலுள்ள கிளஸ்டர் மீடியா கல்லூரியில் சமூக சேவையில் சிறந்து விளங்குபவர்களை கௌரவிக்கும் விழாவும், புற்றுநோய் விழிப்புணர்வு கையேடு வெளியீட்டு விழாவும் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் இந்த அமைப்பின் நிறுவனர், லயன் டாக்டர் அறிவழகன், முன்னாள் மாவட்ட நீதிபதி சசிகலா, அரோமா க்ரூப் ஆப் கம்பெனிஸ் நிறுவனத்தின், முதன்மை செயல் அதிகாரிவிஜயலட்சுமி,டாக்டர் கோவர்த்தினி, முன்னாள் இஸ்ரோ விஞ்ஞானிவிஜயலட்சுமி பிச்சாண்டி, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் போது பொதுமக்களிடையே புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்ட புற்றுநோய் விழிப்புணர்வு கையேடு டாக்டர் கோவர்த்தினி வெளியிட்டார், அதனை முன்னாள் மாவட்ட நீதிபதி சசிகலா பெற்றுக் கொண்டார்.

மேலும் சமூக நலனுக்காக அர்ப்பணிப்புடன் சேவை செய்து வரும் சிறந்த பெண்கள் மற்றும் சமூக சேவையாளர்களுக்கு "சேவைநாயகி 2026"விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. சாய் சோசியல் சர்விஸ் அமைப்பு பெண்கள் முன்னேற்றம், பார்வை பரிசோதனை முகாம்கள், புற்றுநோய் விழிப்புணர்வு மற்றும் மருத்துவ முகாம்கள், ஏழை எளிய குழந்தைகளுக்கு கல்வி வழங்குதல், ஆதரவற்றவர்களுக்கு உணவு வழங்குதல் போன்ற பல்வேறு மனிதநேய சேவைகளை செய்து வருகிறது.

குறிப்பாக பத்தாம் வகுப்பு முதல் கல்லூரி உயர்கல்வி வரை ஏழை எளிய மாணவ,மாணவிகளுக்கு கட்டணமின்றி கல்வி வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது புற்றுநோய் நோயாளிகள் அதிகரித்து வரும் நிலையில் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் பல்வேறு மருத்துவ முகாம்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# அச்சிறுப்பாக்கம் அருகே ஆத்தூர் கிராமத்தில் ஸ்ரீ ஓம் சிவசக்தி அம்மன் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா



செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் அருகே ஆத்தூர் கிராமத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ முருகர், ஸ்ரீ ஓம் சிவசக்தி அம்மன், கெங்கை அம்மன், ஸ்ரீ எல்லையம்மன், ஸ்ரீ பொன்னியம்மன்,ஆலய நூதன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா வெகு விமர்சையாக நடைபெற்றது.

இந்த கும்பாபிஷேக விழாவானது கடந்த வெள்ளிக்கிழமை விக்னேஸ்வர பூஜை கணபதி பூஜை நவகிரக ஹோமம் உள்ளிட்ட பூஜைகளுடன் கும்பாபிஷேக விழாவானது தொடங்கியது.

இதனைத் தொடர்ந்து நான்காம் கால யாகசாலை பூஜை பூர்ணாஹூதி உள்ளிட்ட பல்வேறு பூஜைகள் செய்யப்பட்டு புனித நீர் யாகசாலையில் இருந்து சிவாச்சாரியார்கள் கோவில் உட்பிரகாரம் வளம் வந்து கோபுர கலசத்திற்கு புனித நீர் எடுத்துச் செல்லப்பட்டு வேத மந்திரங்கள் முழங்க கோபுர கலசத்தில் சிவாச்சாரியார்கள் புனித நீர் ஊற்றி மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது இதனைத் தொடர்ந்து கோவில் உட்பிரகாரத்தில் உள்ள ஓம் சிவ சக்தி அம்மன் சுவாமிக்கும் புனித நீர் ஊற்றிமகாகும்பாபிஷேக விழா நடைபெற்றது இந்த கும்பாபிஷேக விழாவில் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினார்.

# உளுந்தாண்டவர் கோவில் பகுதியில் மாஷபுரீஸ்வரர் கோவிலில் கும்பாபிஷேக விழா நடைபெற்றது



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை உளுந்தாண்டவர் கோவில் பகுதியில் மிகவும் பழமை வாய்ந்த அருள்மிகு லோகாம்பிகை சமேத மாஷபுரீஸ்வரர் கோவில் அமைந்துள்ளது இந்த கோவிலை புதுப்பித்து மகா கும்பாபிஷேகம் நடத்த தமிழக அரசின் இந்து சமய அறநிலைத்துறை சார்பில் ரூபாய் ஒரு கோடியே ஐம்பது லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.அந்த நிதியின் கீழ் கோவில் புதுப்பிக்கப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது இதற்காக இன்று காலை பாலாலய கும்பாபிஷேகம் நடைபெற்றது அப்பொழுது மாஷகிரீஸ்வரருக்கு சிறப்பு பூஜைக்கு செய்யப்பட்டு மகாதீபாரதனை நடைபெற்றது தொடர்ந்து கோவில் வளாகத்தில் புனித நீர் அடங்கிய கலசங்கள் வைக்கப்பட்டு விக்னேஸ்வர பூஜை, கணபதி ஹோமம் உட்பட பல்வேறு வகையான யாகசாலை பூஜைகளை வேத மந்திரங்கள் முழுங்க சிவாச்சாரியார்கள் யாகசாலை பூஜையை நடத்தினர் தொடர்ந்து மகா தீபாரதனை தொடர்ந்து கலசங்களுக்கு சங்கல்பம் செய்யப்பட்டு மகாதீபாரதனை செய்யப்பட்ட பின் மங்கள வாத்தியங்கள் முழங்க சிவாச்சாரியார்கள் யாகசாலையில்வைத்துபூஜைசெய்யப்பட்டகலசங்களை எடுத்துக்கொண்டு கோவில் பிரகாரத்தை பலம் வந்தனர் தொடர்ந்து மூலவர் அருகே வைக்கப்பட்டிருந்த பாலாலயங்கள் மீது புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தனர் இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு ஓம் நமச்சிவாய முழக்கங்கள் எழுப்பி மாஸபுரீஸ்வரரை வழிபட்டனர்.

# ஈரோட்டில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் கோலாகல மகளிர் தின விழா: 250 பேருக்கு அசைவ விருந்து அளித்து மாவட்ட செயலாளர் நெகிழ்ச்சி





சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, ஈரோடு மாநகர் மாவட்ட தமிழக வெற்றிக் கழகம் சார்பில் பிரம்மாண்டமான மகளிர் தின விழா ஈரோடு சம்பத் நகரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது. மாவட்ட செயலாளர் பாலாஜி தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், மாநகர் மாவட்டத்தைச் சேர்ந்த ஏராளமான மகளிர் அணியினர் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். விழாவின் தொடக்கமாக மகளிர் அணியினர் அனைவரும் ஒன்றிணைந்து கேக் வெட்டி ஒருவருக்கொருவர் வாழ்த்துகளைப் பகிர்ந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து பெண்களுக்கு பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவின் முக்கியநிகழ்வாக,இதில் கலந்து கொண்ட சுமார் 250-க்கும் மேற்பட்ட பெண்களுக்குச் சிறப்பானஅசைவவிருந்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பாலாஜி அவர்கள் முன்னின்று தனது கைப்பட அனைவருக்கும் உணவைப் பரிமாறியது அங்கிருந்தவர்களிடையே பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது. கட்சியின் வளர்ச்சிக்குப் பாடுபடும் மகளிரைக் கௌரவிக்கும் விதமாக அமைந்த இந்த விழா, ஈரோடு தமிழக வெற்றிக் கழகத்தினரிடையே பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# வண்ணார்பேட்டை MSP பாய்ஸ் இளைஞரணி நடத்தும் மாபெரும் கிரிக்கெட் போட்டி



தூத்துக்குடி சங்கரப்பேரி கான் மெட்டல் மைதானத்தில் வண்ணார்பேட்டை எம்.எஸ்.பி. பாய்ஸ் இளைஞரணி நடத்தும் மாபெரும் கிரிக்கெட்

போட்டியில் மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர் பொன்பாண்டி ரவி சக்திவேல், சேவியர், ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இந்த போட்டியில் பல்வேறு அணிகள் பங்கேற்றன மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர் பொன்பாண்டி ரவி போட்டியை துவக்கி வைத்து வெற்றி பெற்றஅணிக்குகோப்பை மற்றும் பரிசுத்தொகையை வழங்கிவழங்கினார். நிகழ்ச்சியில் ஒன்றிய சுற்றுசூழல் அணி ராஜேந்திரன், தவெக அஜிதா ஆக்னல், வசந்தகுமாரி, இரா பாலன், கிளைச்செயலாளர்சேசு ராஜா,ஊர் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.